பக்கங்கள் 18 + 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 28 புதன்கிழமை 11.06.2024 | அதிர்வு 312

## சம்மி குமாரரத்னவுக்கு 22 வரை விளக்கமறியல்

(கீத பொன்கலன்)



பிரபல ஊடகவிய லாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட

06▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ஜேர்மனியைச் சென்றடைந்த அநுர

## இன்று மாலை அந்நாட்டு ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஜேர்மனியக் கூட்டாட்சி குடியரசுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று செவ்வாய்க்கிழமை காலை பெர்லினின் பிராண்டன்பேர்க் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

ஜனாதிபதியை வரவேற்கும் உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு, ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் வால்டர் ஸ்டெய்ன்மியரின் தலைமையில் இன்று மாலை பெர்லினில் உள்ள பெல்வீவ் மாளிகையில் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து,

06▶



# வடக்கு மனிதப் புதைகுழி விவகாரத்தை ராஜபக்ஷ அரசு போல் கிடப்பில் போடாதீர்!

## உண்மை கண்டறியப்பட வேண்டும் என அநுர அரசிடம் சஜித் அணி வலியுறுத்து

“வடக்கில் தொடர்ந்து தோண்டப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் அநுர அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும். கடந்த ராஜபக்ஷ அரசு போல் இந்த விவகாரத்தை அநுர அரசும் கிடப்பில் போடக்கூடாது.”

06▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# நல்லூர் பிரதேச சபை தொடர்பில் விக்கி - சுமந்திரன் உடன்படிக்கை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரனும் இன்று மாலையில் நல்லூர் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் உடன படிக்கை ஒன்றைச் செய்து கொண்டனர்.

இந்த உடன்படிக்கை இன்று மாலை கொழும்பில் உள்ள விக்னேஸ்வரன் இல்லத்தில் கையெழுத்திடப்பட்டது.

உடன்படிக்கையின்படி நல்லூர் பிரதேச சபையில் முதல் இரண்டு வருடங்கள் தவிசாளர் பதவி தமிழ் மக்கள் கூட்டணிக்கும், அடுத்த இரண்டு வருடங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் வழங்கப்படுகின்றது.

இந்த உடன்படிக்கை நல்லூர் பிரதேச சபைக்காக மட்டுமே எனத் தெரிவிக்கப்பட்டாலும், பிற இடங்களில் தமிழ் மக்கள் கூட்டணி இலங்கைத் தமிழரசுக் கட்சியை முழுமையாக ஆதரிக்கும் என்றும் தெரியவந்தது.









## காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வுக்கு

# மன்னாரில் ஒன்றுதிரண்ட ஆயிரக்கணக்கான மக்கள்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும்வகையில்முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சிவில், பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி இன்று புதன்கிழமை நடைபெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் ஆரம்பமான இந்தக் கவனவீர்ப்புப் பேரணியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள், வர்த்தகர்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளடங்களாக ஆயிரக்கணக்கான மக்களும் பங்குகொண்டனர்.

இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கவனவீர்ப்புப் பேரணி ஆரம்பமாகி பிரதான வீதியூடாகச் சென்று மன்னார் பஜார் பகுதியைச் சென்றடைந்தது.

பின்னர் பேரணியில் கலந்துகொண்டவர்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஒன்றுகூடி பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வை உடனடியாக நிறுத்து, எங்கள் மண்ணைச் சுடு காடாக்காதே, அடிக்காதே, அடிக்காதே எங்கள் வயிற்றில் அடிக்காதே உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் பேரணியில் பங்கேற்றனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம் அடிகளாரும் போராட்டக் களத்துக்கு வருகை தந்தார்.

மன்னார் மக்கள் எதிர்நோக்கும் குறித்த இரு பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனிடம் மன்னார் ஆயர் மற்றும் சர்வமதத் தலைவர்கள் இணைந்து மகஜரைக் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர்,

“மன்னார் மாவட்ட மக்கள் நீண்ட காலமாகக் காற்றாலை மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறித்து நான் நன்கு அறிவேன்.

மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் சர்வமதத் தலைவர்கள் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், நான் உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பேன்.” – என்றார்.







# மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக தமிழரசின் சிவம் பாக்கியநாதன் தெரிவு!

## பிரதி மேயராகத் தினேஸ்குமார் பதவியேற்பு

(கனகராசா சரவணன், வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதன் இன்று புதன் கிழமை போட்டிகள் இன்றி தெரிவு செய்யப்பட்டார்.

இந்த மாநகர சபைக்கான மேயர், பிரதி மேயரைத் தெரிவு செய்யும் நிகழ்வு மாநகர சபை ஆணையாளர் நா. தனஞ்ஜெயன் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் மாநகர சபையில் இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபை மேயராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சிவம் பாக்கியநாதன் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

பிரதி மேயர் பதவிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வைரமுத்து தினேஸ்குமார், பந்து சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் கே.சத்தியசீலன் ஆகியோர் முன்மொழியப்பட்டனர்.



அதையடுத்துப் பிரதி மேயரைத் தேர்ந்தெடுக்கப் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வைரமுத்து தினேஸ்குமார் 18 வாக்குகளையும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் சத்தியசீலன் 4 வாக்குளையும் பெற்றுக் கொண்டதுடன் 12 பேர் நடுநிலையாக இருந்து கொண்டனர்

இதில் 18 வாக்குளைப் பெற்ற தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வைரமுத்து தினேஸ்குமார் பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிகழ்வில் தமி ழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், வைத்தியர் இளைய தம்பி சிறிநாத் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.











# இனத்துவ உணர்வுள்ள அடுத்த தலைமுறையின் உருவாக்கமே தமிழ்த் தேசியத் தளத்தின் அரண்!

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

இனத்துவ உணர்வுள்ள அடுத்த தலைமுறையின் உருவாக்கமே தமிழ்த் தேசியத் தளத்தின் அரணாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

சிறீதரன் எம்.பியின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 2.1 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி, முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தை மாணவர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இனத்தையும், மொழியையும் நேசிக்கின்ற அடுத்த தலைமுறையின் உருவாக்கம்தான், தனது இருப்புக்காகப் போராடும் ஓர் இனத்தின் எதிர்கால நம்பிக்கையாக அமைய முடியும். அத்தகையோர் தலைமுறையின் தோற்றத்துக்கு வழிகோலும் சமூகக் கடப்பாட்டைக் கொண்ட பாடசாலைகள், கல்வி அடைவுமட்டத்துக்கான தளங்களாக மட்டுமல்லாது, பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கும், தலைமைத்துவ வாண்மைக்குமான களங்களை ஏற்படுத்த வேண்டும். அந்தக் காலப்பெரும் பணியை முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.” – என்றார்.



கல்லூரியின் முதல்வர் அரசரட்ணம் பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் உபுல்தெனியவுக்கு 25 வரை மறியல் நீடிப்பு




முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனியவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள துஷார உபுல்தெனிய இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துஷார உபுல்தெனிய, நிதி மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அத்துல திலகரத்ன என்பவரை ஜனாதிபதியின் பொது மன்னிப்பைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக விடுதலை செய்த குற்றச்சாட்டின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரணில் இன்று சி.ஐ.டியில் வாக்குமூலம்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று புதன்கிழமை முன்னிலையாகி ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் வழங்கினார்.

இலங்கையில் மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் அளிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இன்று அழைக்கப்பட்டிருந்தார். அதற்கமைய அங்கு இன்று முன்னிலையாகிய ரணில், ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

இலங்கையில் மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு அளித்திருந்தார். இந்த முறைப்பாடு தொடர்பாக, அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களிடம் இருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சம்மி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் சம்பந்தப்பட்ட சாட்சியான முன்னாள் புலனாய்வாளர் ஒருவரைத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தி விசாரணைகளை முடக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராணுவ பிரிகேடியர் சம்மி குமாரரத்ன என்பவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க திருகோணமலை நீதிவான் கருப்பையா ஜீவராணி இன்று உத்தரவிட்டார்.

இன்று திருகோணமலை நீதிமன்றத்தில் இந்தப் பிரிகேடியர் முன்னிலைப்படுத்தப்பட்ட சமயமே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது.

சம்பந்தப்பட்ட பிகேடியர் சுகவீன முற்றிருப்பதால் அவரை விளக்கமறியலில் வைக்காமல் வைத்தியசாலையில் சேர்க்க உத்தரவிடுமாறு அவரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும், சந்தேகநபரை திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதித்து, உரிய பரிசோதனையின் பின்னர் தேவையானால் மாத்திரம் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தவும், இல்லையேல் விளக்க மறியலுக்கு அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏற்கனவே 'ட்ரயல் - அட் பார்' நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்ட 9 இராணுப் புலனாய்வாளர்களில் இவரே மூத்த அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

குற்றம் சுமத்தப்பட்ட சமயம் கிரிதல இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாக லெப்டினன் கேணல் தரத்தில் இவர் பணியாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது பிரிகேடியராக அவர் உள்ளார்.

## வடக்கு மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

யாழ். செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மனிதப் புதைகுழி அகழ்வுக்கு நிதி வழங்குவோம், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று வெறும் வார்த்தைகளைக் கூறிவிட்டு இந்த அரசு இருக்கக்கூடாது.

வடக்கில் செம்மணி உள்ளிட்ட பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்படும் எலும்புக்கூடுகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி உண்மைகளைக் கண்டறிய அரசு முழு வீச்சுடன் செயற்பட வேண்டும்.

குற்றங்கள் நடந்திருப்பின் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் நீதிமன்றமும் நடுநிலையுடன் முழு கரிசனை செலுத்தும் என்று நம்புகின்றோம்." – என்றார்.

## ஜேர்மனியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் வால்டர் ஸ்டெய்ன்மியருக்கும் இடையில் உத்தியோகபூர்வ சந்திப்பு நடைபெறவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இடையில் குந்திய நந்திகள்

முன்னைய அரசுகளின் காலங்களில் இடம்பெற்ற மோசடிகள், முறைகேடுகள், ஊழல்கள், நிர்வாகச் சீர்கேடுகள் போன்றவை இந்த அரசில் இல்லை என்று தம்பட்டம் அடிப்பதிலோ அல்லது பழைய ஊழல், மோசடிகளைக் கண்டுபிடித்து, குற்றம் இழைத்தோரைத் தண்டிக்கிறோம் எனப் பிரலாபிப்பதிலோ அர்த்தம் இல்லை. அதையும் தாண்டி, வளர்ச்சிப் பாதையில் நாட்டை முற்கொண்டு செல்கின்றோம் என்பதை செயல்திறனில் நிரூபிப்பதில் தான் அரசின் தகுதி, தகுதியினங்கள் தங்கியுள்ளன.

ஆனால், இங்கு இப்போது பல விடயங்களும் வாய்ச்சவடாலில்தான் நகர்கின்றனவே தவிர, செயலில் இல்லை என்பது தான் கள நிலைமையாக உள்ளது.

இப்பொழுது உலகளாவிய ரீதியில் முக்கிய விடயமாக இருப்பது பாரம்பரிய எரிசக்தி முறைமையிலிருந்து நாட்டை விடுவித்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை முன்னேற்றுவதுதான். அந்த விடயத்தில் இந்த அரசாங்கம் பெரிய பின்னடைவு நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை முன்னேற்றுவதில் அரசாங்கத்தின் மந்தமான முன்னேற்றம் குறித்து இப்போது பல மட்டங்களிலும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் எழுபது வீத மின்சாரத்தை சுத்தமான எரிசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நாட்டின் இலட்சிய இலக்கு, இனி எட்ட முடியாததாகி வருவதாக முதலீட்டாளர்கள் ஆழ்ந்த கவலைகளை தெரிவிக்கின்றனர்.

இந்தத் தேசிய சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, கடந்த ஆறு மாதங்களில் எந்தவொரு புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களையும் தொடங்கவோ அல்லது நிலுவையில் உள்ள எந்தவொரு திட்டங்களையும் அங்கீகரிக்கவோ அது தவறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தப் போக்கு தொடர்ந்தால், இலங்கை அதன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடைய இன்னும் ஒரு நூற்றாண்டு ஆகலாம் என்று தொழில்துறை பங்குதாரர்கள் எச்சரிக்கின்றனர்.

சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் உலகளாவிய எரிசக்தி மாற்றங்களை கவனமாக ஆராய கொள்கை வகுப்பாளர்களை வலியுறுத்தும் முதலீட்டாளர்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டில் இலங்கை தற்போது உலகளாவிய அளவுகோல்களை விட கணிசமாக பின்தங்கியிருக்கும் மோசமான கட்டத்தையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

அரசாங்கம் நூறு வீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்கை அடைவது பற்றி பகிரங்கமாக அறிவிக்கிறது. ஆனால் இந்த இலக்கை அடைய ஒரு யதார்த்தமான, சாத்தியமான காலக்கெடுவையோ, செயல் திட்டத்தையோ, பல தரப்புப் பங்களிப்புக்கான அரவணைப்பு வாய்ப்புகளையோ முன்வைக்கத் தவறிவிட்டது என்பது பெருங் குறையாகவும் தவறாகவும் விமர்சிக்கப்படுகின்றது.

அரச நிர்வாகத்தின் சமச்சீரற்ற செயல் போக்கு, நிர்வாகத் தடைகள், குளறுபடிகள், சீர்திருத்தங்களுக்கான நோக்கும் வாய்ப்பும் இல்லாமை, தீர்க்கதரிசனமான இலக்குகளை நோக்கி நகர்வதற்கான முன்முயற்சியின்மை என்று இத்திசையில் நாடு முன்நகர்வதற்கான பல இடைஞ்சல்களே இந்த அரசின் கீழ் நந்திகளாக இடையில் குந்திக் கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடையும் விவகாரத்தில் மட்டுமல்ல, நாட்டின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களிலும் இதுதான் நிலைமை.

2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து எழுபது வீத மின் சாரத்தை உற்பத்தி செய்வதையும், 2050 ஆம் ஆண்டுக்குள் நூறு வீதம் என்ற நீண்ட கால இலக்கை அடைவதையும் நாடு நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இலக்குகளை அடைய, நாடு முழுவதும் சூரிய, காற்றாலை, நீர் மற்றும் உயிரி எரிசக்தி திட்டங்களில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் செய்யப்பட வேண்டும்.

இந்த முயற்சிகள் இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருள்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பது மட்டுமல்லாமல், எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பசுமைத் திட்டங்கள் மற்றும் நிலையான தொழில்கள் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஆனால் இவற்றையெல்லாம் அடைய விடாமல் இந்த அரசில் பல நந்திகள் இடைஞ்சலாகக் குந்தியிருப்பதுதான் நாட்டின் பெரும் துரதிர்ஷ்டம்.

# பட்டலந்த அறிக்கையைத் தூசிதட்டி எடுத்தோர் தமிழர் படுகொலையைக் கையாள மாட்டார்கள்!

## அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவிப்பு

பட்டலந்த அறிக்கையை அரசியலுக்காக தூசி தட்டி வெளியில் எடுத்தவர்கள் தமிழர்களுக்கு எதிராக புரியப்பட்ட இன அழிப்பு, இனப் படுகொலை விடயங்களை பகிரங்கமாக கையாள்வதற்கு முன்வர மாட்டார்கள் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செம்மணி சமூக புதைகுழியில் தோண்டத் தோண்ட கொலை செய்து புதைக்கப்பட்ட அல்லது உயிரோடு புதைத்துக் கொல்லப்பட்டோரின் உடல் எச்சங்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் தோன்றுகின்றன.

இதற்கான நீதி விசாரணை நடத்தப்படும் என நீதி அமைச்சர் குறிப்பிட்டாலும் அகழ்வுப் பணிகளும் ஆய்வுகளும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அத்துறையில் சர்வதேச நிபுணத்துவம் கொண்டவர்களால் நடத்தப்பட்டால் மட்டுமே நிகழ்த்தப்பட்டுள்ள இனப் படுகொலைஞக்கு முகம் கொடுத்து வலிகளை சுமந்து அரசியல் நீதிக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு நீதி கிட்டும். தேசிய மக்கள் சக்தி இதற்கான கதவுகளை திறக்குமா? அல்லது நாட்டின் இறைமை எனக் கூறி நீதிக்கான தடைகளை விதிக்குமா? என்பதே எமது கேள்வி.

தற்போது அகழப்படும் செம்மணி சமூக புதைக்குழி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க ஆட்சி காலத்துக்கு உரியது. இந்தப் புதைகுழியை மூடி மறைக்கவும் கொலையாளிகளைப் பாதுகாக்கவும் அந்தக் காலத்தில் சமாதான தேவதையாக காட்சியளித்த சந்திரிக்கா மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தியாக தற்போது அநுர குமார தலைமையில் பதவியில் இருக்கும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் குற்றவாளி கூண்டில் நிற்க வேண்டியவர்களே.

தற்போது அகழப்படும் சமூக புதைகுழியை விட மேலும் பல சமூகப் புதைகுழிகள் தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுக்கு எல்லாம் விசாரணையை நடத்த எந்த ஒரு ஆட்சியாளர்களும் துணியவில்லை.



அகழ்வு மற்றும் ஆராய்வு அறிக்கைகளை எல்லாம் பாதாள கிடங்கில் கிடப்பில் போடப்பட்டுள்ளன. பட்டலந்த அறிக்கையை அரசியலுக்காக தூசி தட்டி வெளியில் எடுத்தவர்கள் தமிழர்களுக்கு எதிராக புரியப்பட்ட இன அழிப்பு, இனப்படுகொலை விடயங்களை பகிரங்கமாக கையாள்வதற்கு முன்வர மாட்டார்கள். அதுவும் அரசியலே.

தமிழர் தாயகப் பூமியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள படை முகாம்கள் அதன் சூழவுள்ள வளவுகள் மற்றும் நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகளிலும் சமூக புதை குழிகள் இருக்கலாம். அவ் அந்நில பிரதேசங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

வன்புணர்வின் பின்னர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி தொடர்பில் மரண தண்டனை கைதியான கோப்ரல் சோமரத்னா என்பவரால் 600 மேற்பட்டோர் செம்மணியில் கொன்று புதைக்கப்பட்டனர் எனக் கூறியதன் பின்னர் அதனோடு தொடர்புடையவர்களாக அடையாளம் காணப்பட்டோர் விடுவிக்கப்பட்டது மட்டுமல்ல பதவி உயர்வுகளும் அரச சலுகைகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சமூகப் புதைகுழியை ஆட்சியாளர் ஏற்றுக் கொண்டு அந்தக் காலப் பகுதியில் இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாய் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளையும் அரச சலுகைகளையும் அரசு மீளப்பெறல் வேண்டும்.

இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை. மனிதாபிமான வகையில் மீட்பு யுத்தமே நடந்தது எனக் கூறும் முன்னாள் ராணுவத் தளபதி சவேந்திர சில்வா போன்றவர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகரா போன்றவர்கள் மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் பிமல் ரத்னாயக்கவும் செம்மணி சமூக புதைகுழி காட்சிகளை கண்ட பின்னர் தாமத நிலைப்பாட்டை மாற்றித் தமிழர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவர்கள் மட்டுமல்ல தமிழர்களின் வாக்குகளை பெற்று அரசியல் அதிகாரம் நாற்காலிகளில் அமர்ந்த பின்னர் அரச சுகங்களுக்காக இனப்படுகொலை ஆட்சியாளர்களை பாதுகாத்து அரசியல் போராட்டத்தையும், போராளிகளையும் காட்டிக் கொடுத்தவர்களும் தம் மன சாட்சிகளைத் தொட்டு பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மனித குலத்துக்கு எதிரான திட்டமிட்ட இன படுகொலை 2009 இறுதி யுத்தத்துக்கு முன்னரும் இலங்கை பேரினவாத ஆட்சியாளர்களால் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தியுள்ளமைக்கு மிக ஆணித்தரமான சாட்சியாகவே செம்மணி சமூக புதைகுழி காட்சி தருகின்றது. இது மனித நேயம் கொண்ட மனசாட்சி உள்ளோரை நிச்சயமாக தட்டி எழுப்பும்.

இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தில் தமிழர்களை கொன்று குவித்ததும், காணாமலாக்கப்பட்டு சமூக புதைகளுக்குள் தள்ளியதும், ஆயிரக் கணக்கானோரை சித்திரவதை செய்து சிறைகளில் அடைத்ததும் லட்சக் கணக்கானோரை புலம்பெயர வைத்ததும் தமிழர்கள் என்பதற்காக மட்டுமல்ல, தமிழரின் தாயகத்தையும் தேசியத்தையும் அதன் அரசியல் வழிதடத்தையும் அழிப்பதற்காகவே.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலைமையில் பேரினவாத சக்திகள் அரசியல் முள்ளிவாய்க்காலில் எம்மை மூழ்கடிக்கவே திட்டங்கள் தீட்டத்தொடங்கியுள்ளன. அவர்களின் அரசியல் முட்கம்பி வேலிக்குள் நிரந்தரமாக அடைத்து வைக்கவும் துடிக்கின்றனர்.

போராளிகள் விதையான மண்ணில் இருந்தும் முள்ளிவாய்க்கால் நிலத்தில் இருந்தும் எழும் குரலைத் தமிழர் தேச அரசியலுக்கான குரலாக ஏற்று, கொள்கை அடிப்படையில் அரசியலை முன்னோக்கி நகர்த்த ஒன்றுபடுமாறு தமிழ் தேச அரசியல் தலைமைகளை கேட்கின்றோம்.- என்றுள்ளது.

# நீலாவணன் சிறப்பிதழ் வெளியீடு சனிக்கிழமை!

இலக்கிய வெளி சஞ்சிகையின் நீலாவணன் சிறப்பிதழின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை (13) பிற்பகல் 3.30 மணிக்கு அம்மன் வீதி, நல்லூரில் அமைந்துள்ள எங்கட புத்தக இல்லத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையைப் பேராசிரியர் க.ஸ்ரீகணேசனும், சிறப்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும், மதிப்பீட்டுரைகளை இ.இராஜேஸ்கண்ணன், சி.விமலன் ஆகியோரும் நிகழ்த்துவர்.



# கிளிநொச்சிப் பகுதியை சேர்ந்த நபர் தமிழகம் காரைக்காலில் கைதானார்!

உரிய ஆவணங்கள் எதுவுமின்றி தமிழகம் காரைக்கால் ரயில் நிலையத்தில் சுற்றித் திரிந்த இலங்கையைச் சேர்ந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர் கிளிநொச்சிப் பகுதியை சேர்ந்த 35 வயதான அஜந்தன் என்பது தெரிய வந்துள்ளது.

பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தபோது, அவரிடம் எந்த ஆவணமும் இல்லை என்பது தெரிய வந்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டு 6 மாத கால விசாவில் இந்தியா வந்தார் என்றும் விசாக் காலம் முடிந்தும் இலங்கை திரும்பாமல், மேற்கு வங்கம், ஆந்திரா, டில்லி, கேரளா, தமிழ்நாடு என்று நாட்டின் பல பகுதிகளிலும் சுற்றித் திரிந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# இன்று ஏற்படவிருந்த ரயில் விபத்தானது பெண் ஒருவரால் தடுத்து நிறுத்தப்பட்டது!

இலங்கையில் ஏற்படவிருந்த பாரிய ரயில் விபத்து பெண் ஒருவரால் தடுக்கப்பட்டுள்ளது.

கண்டிக்கும் பேராதனைக்கும் இடையிலான ரயில் பாதையில் இன்று காலை விபத்து ஏற்படவிருந்த நிலையில் அது தவிர்க்கப்பட்டுள்ளது.

கண்டி நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள தண்டவாளத்தில் பாரிய தாழிறக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. காலை 5.30 மணியளவில் வேலைக்கு சென்றுக் கொண்டிருந்த பெண் ஒருவர் இதனை அவதானித்து உடனடியாக ரயில் நிலைய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

உடனடியாகச் செயற்பட்ட ரயில் நிலைய அதிகாரிகள் அந்த நேரத்தில் குறித்த தண்டவாளத்தின் ஊடாக வந்த ரயிலை நிறுத்திப் பயணிகளைக் காப்பாற்றியுள்ளனர்.

இதன் காரணமாக கண்டிக்கும் பேராதனைக்கும் இடையிலான ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே பாணந்துறையில் இருந்து கொழும்பு நோக்கி ரயில் ஒன்று சென்று கொண்டிருந்த நிலையில், தண்டவாளத்தில் ஏற்பட்ட பாதிப்பை நபர் ஒருவர் தெரியப்படுத்தும் வகையில் சிவப்பு சட்டையுடன் ஓடியிருந்தார். இதன் காரணமாக ஏற்படவிருந்த பாரிய விபத்து தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# மன்னார் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அனைத்து திட்டங்களையும் உடன் நிறுத்துங்கள்

## *கவனவீர்ப்பு போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிப்பு*

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

இலங்கைக்கும் மன்னார் மாவட்டத்துக்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பல சட்டவிரோத அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான அனைத்து திட்டங்களையும் உடன் நிறுத்தி, மக்களுடன் நல்ல முறையில் கலந்துரையாடி, பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் திட்டங்களை கைவிட்டு, மக்களுக்கு நலன்கள் கொண்டு வரும், மக்களை பாதிக்காத திட்டங்கள் நல்ல முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சிவில் பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று புதன்கிழமை (11) காலை 9.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

பேரணி முடிவில் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மகஜர் வாசிக்கப்பட்டு, மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. அந்த மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எங்களையும், எங்கள் வாழ்விடங்களையும், எங்கள் வளங்களையும் பாரிய அழிவிலிருந்து பாதுகாக்க உங்களை வேண்டுகின்றோம்.

கடந்த ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகளை நாம் சாத்வீக முறையில் தொடர்பாடல்கள் வழியாகவும், போராட்டங்கள் மூலமாகவும், பலதுறை சார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட பல அரச நிறுவனங்களுடன் மாவட்ட, மாகாண மத்திய அரசின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரை யாடியதன் மூலமாக எமது நாட்டையும், எமது மாவட்டத்தையும், எமது வாழ் விடங்களையும், எமது வளங்களையும், எமது வாழ்வாதாரங்களையும் பெரும் அழிவிலிருந்து பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும், மகிழ்வுடன் வாழவும் முயற்சிகள் பலவற்றை முன்னெடுத்து வருகிறோம்.

ஆனால் இதுவரைக்கும் இலங்கை நாட்டு மக்களாகிய நாம் பல்வேறு தளங்களிலும், பல்வேறு விடயங்களிலும், திட்டமிட்ட முறையில் நடைபெறும் பல பயங்கரமான அழிவுகளைச் சந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். எங்களுக்கு உரிய மனித உரிமைகள் அனைத்தும்

**தொடர்ச்சி▼**














# மன்னார் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அனைத்து திட்டங்களையும் உடன் நிறுத்துங்கள்

தொடர்ச்சி▲

இழந்த நிலையில், நம்பிக்கைகள் அனைத்தும் அழிக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட நிலையில் உங்கள் ஆட்சியில் வாழ நேரிட்டிருப்பது வேதனைக் உரிய, ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிலையாக உள்ளது.

எமது மாவட்டத்தில் நடைபெறும் சரியான முறையில் திட்டமிடப்படாத திட்டங்களும், மக்களுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்காத திட்டங்களும், நாட்டிலுள்ள பல்வேறு சட்டதிட்டங்களை மீறி முன்னெடுக்கப்படும் திட்டங்களும், எமது மனித உரிமைகளை மீறும் திட்டங்களையும், எமது வாழ் விடங்களையும், வளங்களையும், வாழ்வாதாரங்களையும் அழிக்கும் திட்டங்கள் அனைத்தையும் உடன் நிறுத்தி, மக்களுடன் கலந்தாலோசித்து மக்களின் நீண்ட வாழ்வைப் பாதிக்காத, வளங்களை பாதுகாக்கும், வதிவிடங்களை அழிக்காத, சுற்றுச் சூழலை பாதிக்காத திட்டங்களை மட்டும் முன்னெடுக்குமாறு இலங்கை நாட்டு மக்களாகிய நாம் அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

இப்போது எமது மாவட்டத்தில் எமது வாழ்வை அழித்துக் கொண்டிருக்கும் திட்டங்கள், மனித உரிமை மீறல்கள் சில,

1. மன்னார்தீவில்மேற்கொள்ளப்படும் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்கள் (பல நிறுவனங்கள், இலங்கை மின்சார சபையின் அனுமதியுடன் ஆதரவுடன் செய்து வருகிறது. உதாரணம் தாழ்வுபாடு, கீரி, தரவன் கோட்டை, சாந்திபுரம், சவுத்பார், சிலாவத்துறை, காயாக் குழி போன்ற சில இடங்களில்)

2. வெளிநாட்டு தனியார் கம்பனிகளால் எமது இலங்கை நாட்டையும், மன்னாரையும் முற்றாக அழித்து எங்கள் வளங்கள் முழுவதையும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல மன்னார் தீவிலும், மன்னார் பெரும் நிலப் பரப்பிலும் மேற்கொள்ளப்படும், மேற்கொள்ளப்படவுள்ள பாரிய வளங்களை அழிக்கும், மனிதன் வாழும் உரிமைகளை அழிக்கும் பல கனிய மணல் அகழ்வு திட்டங்கள். இரண்டு நிறுவனங்களால் கனிய மண் அகழ்வு திட்டங்களை முன்னெடுப்பதற்கான திரைமறைவில் பல முயற்சிகள் செய்யப்படுகின்றன.

3. பல ஆண்டுகளாக அழிக்கப்பட்டு வரும் கடல் வளங்கள், அத்துமீறிய இந்திய மீனவர்கள் வருகை, சட்டங்களுக்கு எதிரான மீன்பிடி முறைகளை பயன்படுத்துதல், திட்டமிடாத அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுதல், போன்ற செயல்களால் கடல் வளங்கள் பாரிய அளவில் அழிக்கப்பட்டு வரு கின்றன.

4. மக்களின் வாழ்விடங்களும், காணிகளும் அபகரிக்கப்படுதல், மக்களின் தேவை கருதியும், அவர்களின் மனித உரிமைகள் மதிக்கப்படும் வகையில் காணிகள் இன்னும் பங்கிட்டு கொடுக்கப்படாமல் காலங்கள் பிற்போடப்பட்டு பல ஆண்டுகளாக மக்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். (இதுவரை 4000 ற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வதற்கு காணிகள் கேட்டும், 800 இற்கு மேற்பட்ட இளையோர் சுய தொழில்கள் தொடங்க காணிகள் கேட்டும் மன்னார் மாவட்ட செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள்.)

இவை போன்ற பல பாரிய அழிவுகளை இலங்கைக்கும், எமது மாவட்டத்துக்கும், மக்களுக்கும் ஏற்படுத்தும், பல சட்டவிரோத அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான அனைத்து திடங்களையும் உடன் நிறுத்தி, மக்களுடன் நல்ல முறையில் கலந்துரையாடி, பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் திட்டங்களை கைவிட வேண்டும். மக்களுக்கு நலன்கள் கொண்டுவரும், மக்களைப் பாதிக்காத திட்டங்கள் நல்ல முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும் .

இந்த கண்டன, எதிர்ப்பு ஊர்வலத்தில் நீங்கள் ஆட்சி செய்யும் இலங்கை நாட்டின், மன்னார் மாவட்டத்தின் மக்களாகிய நாங்கள் இவ்வாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.- என்றுள்ளது.







# அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கையில் சுற்றுச் சூழலைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்போது சுற்றுச் சூழலைக் கவனத்தில் எடுக்காமல் செயற்பட முடியாது. சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தே அதனைச் செயற்படுத்தவேண்டும். இதன்மூலமே எதிர்கால சந்ததிக்கு வளமான சுற்றாடலைக் கையளிக்க முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பசுந்தேசம் அமைப்பும், இயற்கை நண்பர்கள் இயக்கமும் இணைந்து நடத்திய சர்வதேச சுற்றுச்சூழல் நாள் நிகழ்வு கைதடி சிறுவர் பூங்காவில் நேற்று செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

அவர் தனது உரையில் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் இவ்வாறான சர்வதேச சுற்றுச்சூழல் தினம் எதுவும் இருக்கவில்லை. இன்று எல்லாவற்றுக்கும் தினம் கடைப்பிடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். எதன் ஒன்றின் தேவை உணரப்படுகின்றதோ அதற்கு இன்று நாள்களைக் கடைப்பிடிக்கின்றோம். அந்த வகையில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியம் எழுந்துள்ளமையால் அதற்கும் சர்வதேசநாள்கடைப்பிடிக்கப்படுகின்றது.

நாம் மீண்டும் சில விடயங்களில் பழைமைக்கு திரும்புவது சூழலை பாதுகாக்கும் என்று கருதுகின்றோம். அன்றைய நாள்களில் 'சொப்பிங்பை' என்று எதுவுமில்லை. ஆனால் இன்று எங்கும் எதிலும் 'சொப்பிங்பை'. அதை இலகுவாகவும் இலவசமாகவும் பெற முடிகின்றது. அன்றைய நாள்களில் சிமெந்து தாள்களில் செய்த 'மரத்தாள் பை' பயன்படுத்தப்பட்டது. இன்று வெளிநாடுகளில் 'சொப்பிங் பை' பணத்துக்கே கொடுக்கின்றார்கள். அதைப் போன்று இங்கும் அதன் பாவனையை இறுக்கமாக்க வேண்டும்.

இன்றைய தினம் செம்முகம் ஆற்றுகைக் குழுவினர் மிகச் சிறப்பானதொரு ஆற்றுகையை வழங்கினார்கள். சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் அவர்களின் ஆற்றுகை அமைந்திருந்தது. பெரியவர்கள் எதைச் செய்கின்றார்களோ அதைப்பார்தே சிறுவர்கள் பழகுகின்றார்கள். அவர்கள் சுற்றாடலை பாதிப்படையச் செய்கின்றார்கள் என்றால் பெரியவர்களாகிய எங்களின் செயற்பாடுகளே காரணம்.

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரையைச் சென்று பாருங்கள். அந்தப் பிரதேசம் எங்கும் சொப்பிங்பைகள் நிறைந்திருக்கும். இப்போது ஆலயத் திருவிழாக்களிலும் பிளாஸ்ரிக் போத்தல்கள், பிளாஸ்ரிக் குடிபானம் வழங்குகின்றார்கள். அதைக் குடித்துவிட்டு அந்த இடத்திலேயே போட்டுவிட்டுப் போகின்றார்கள். அவற்றை உரிய குப்பைத் தொட்டியில் போடுவதற்கு பெரியவர்கள் முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் சிறுவர்கள் அதைப்பார்த்து பழகுவார்கள். எதிர்காலத்திலாவது மாற்றத்தை உருவாக்கலாம். எங்களால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்றில்லை. எதையும் செய்யலாம். இந்த மாற்றத்தை உருவாக்குவதன் விதை விழிப்புணர்வில்தான் தொடங்குகின்றது.

இதைப்போல மற்றொரு விடயம் மரம் நடுகை. இன்றைய சூழல் வெப்ப நிலை அதிகரித்துச் செல்கின்றது. மரங்களை நடுகை செய்வது மாத்திரமல்லாது அதனை கவனமாக வளர்த்தெடுக்கவேண்டும். இதை நாங்கள் செய்யும்போது அதைப் பார்த்து நாளைய சந்ததி பழகும். இதுவே எதிர்காலத்தில் சுற்றுச்சூழல் நேயம்மிக்க சமூகத்தை உருவாக்கும்.- என்றார்.

இந்த நிகழ்வில் செம்முகம் ஆற்றுகைக் குழுவினர் வழங்கிய 'கருவுக்குள் உயிர்க்கும்' ஆற்றுகை நிகழ்வு நடைபெற்றது. அத்துடன் பசுந்தேசம் அமைப்பு நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கான விருதுகளும் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன.

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் தி.சுதர்சன், யாழ். மாவட்ட செயலக முகாமைத்துவ சேவைகள் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி வசந்தினி கௌரிதரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.





# இரண்டு மோட்டார் சைக்கிள்கள் காருடன் விபத்து; இருவர் காயம்!

**(உடப்பு க.மகாதேவன்)**

அனுராதபுரம் – புத்தளம் வீதி, நொச்சியாகம அம்பஹகவெவ பிரதேசத்தில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து நேற்று (10) திகதி இடம்பெற்றுள்ளது. இதன் போது இரண்டு மோட்டார் சைக்கிள்கள் காரின் முன் பக்கத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.




மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயம் ஏற்பட்ட நிலையில் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரின் வேகம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட் டுள்ளது.






# மொனராகலை - கொழும்பு பஸ் விபத்தில் 15 பேருக்குப் படுகாயம்!

## பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதின

மொனராகலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, பஸ்ஸில் பயணித்த 15 பேர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து இன்று (11) காலை அவிசாவளை - கொழும்பு, பழைய வீதியில் வெல்லம்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வெல்லம்பிட்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கும் மீத்தோட்டமுல்ல சந்திக்கும் இடையில் வீதியோரத்தில் மூன்று லொறிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இன்று அதிகாலையில் அதிவேகமாக வந்த பயணிகள் பஸ் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் அடுத்தடுத்து நிறுத்தப்பட்டிருந்த மற்ற மூன்று வாகனங்களும் மோதியதில் நான்கு வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. இவற்றுடன் மேலும் பல வாகனங்கள் இந்த விபத்தில் சிக்கியுள்ளன.

விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொத்தானாயில் யானை தாக்கியதில் காயமடைந்தவர் வைத்தியசாலையில்!

பொத்தானாயில் இன்று அதிகாலை காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மாவடிச் சேனையைச் சேர்ந்த சுலைமான் என்பவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.








# லொஸ் ஏஞ்சல்ஸில் ஊரடங்கு உத்தரவு

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பட்டுள்ள வன்முறை உச்சக்கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில், இரவு நேர ஊரடங்கை அமுல்படுத்த அந்நகர மேயர் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கடுமையான குடியேற்ற கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து லொஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெற்றுவரும் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

வெளிநாடுகளில் இருந்து உரிய ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்கா வந்து வசிப்பவர்களை ட்ரம்ப் தலைமையிலான அரசு வலுக்கட்டாயமாக வெளியேற்றி வருகிறது. இந்த வெளியேற்றம் சட்டவிரோதமானது என்று கூறி, கலிஃபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதோடு மோதலில் ஈடுபட்ட பலரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்ட சிலர், முகமூடியை அணிந்துகொண்டு ஆப்பிள் ஸ்டோர் மற்றும் வணிக வளாகங்களுக்குள் புகுந்து விலையுயர்ந்த அப்பிள் தொலைபேசிகள், டேப்-லட்கள் ஆகியவற்றை திருடிச்சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பல்வேறு கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து லாஸ் ஏஞ்சல்ஸ் மேயர் கரேன் பாஸ் இரவு நேரத்தில் முழுமையான ஊரடங்குப் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு மட்டும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு, தேசிய பாதுகாப்புப் படையினர் மற்றும் கடற்படை காவலர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.















# மூடப்படும் ஜெட்ஸ்டார் ஆசியா; 500 ஊழியர்கள் பணிநீக்கம்!

சிங்கப்பூரை தளமாகக் கொண்ட குறைந்த கட்டண விமான நிறுவனமான ஜெட்ஸ்டார் ஆசியா ஜூலை 31 அன்று அதன் செயல்பாடுகளை நிறுத்தவுள்ளது.

பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு முழு கட்டணமும் திரும்ப வழங்கப்படும் என்று விமான நிறுவனம் கூறியுள்ளது.

இந்த மூடல் காரணமாக சிங்கப்பூரில் 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

ஜெட்ஸ்டார் ஆசியாவின் மூடல் அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட ஜெட்ஸ்டார் ஏர்வேஸின் செயல்பாடுகளையோ அல்லது ஜெட்ஸ்டார் ஜப்பானின் செயல்பாடுகளையோ பாதிக்காது என்று அதன் பகுதி உரிமையாளரான குவாண்டாஸ் தெரிவித்துள்ளது.

ஜெட்ஸ்டார் ஆசியா அடுத்த ஏழு வாரங்களுக்கு படிப்படியாகக் குறைக்கப்பட்ட சேவையை வழங்கும்.

மேலும், பயணிகளின் விமானம் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு அறிவிக்கப்படும்.

ஜூலை 31 மூடலுக்குப் பின்னர் விமானத்தில் பயணிக்க பயணச்சீட்டுகள் உள்ள பயணிகளை விமான நிறுவனம் தொடர்பு கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சில வாடிக்கையாளர்கள் குவாண்டாஸ் குழுமத்தால் இயக்கப்படும் மாற்று விமானங்களுக்கு மாற்றப்படலாம்.

பயண முகவர் அல்லது தனி விமான நிறுவனம் மூலம் முன்பதிவு செய்தவர்கள் அந்த வழங்குநர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு ஜெட்ஸ்டார் ஆசியா அறிவுறுத்துகிறது.

சிங்கப்பூரிலிருந்து மலேசியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களுக்குச் செல்லும் விமானங்கள் உட்பட ஆசியா முழுவதும் 16 வழித்தடங்கள் மூடலால் பாதிக்கப்படும்.

குவாண்டாஸ் ஆசியாவில் வளர்ந்து வரும் குறைந்த கட்டண விமானப் பயணச் சந்தையில் கால் பதிக்க முயன்றதால், 2004 ஆம் ஆண்டு ஜெட்ஸ்டார் ஆசியா தொடங்கப்பட்டது.

எனினும், ஏர் ஏசியா மற்றும் ஸ்கூட் உள்ளிட்ட பிற குறைந்த கட்டண விமான சேவைகளின் அதிரித்த போட்டியை அது எதிர்கொண்டது.

# செயலிழப்பைச் சந்தித்தது செயற்கை நுண்ணறிவு செயலி

செயற்கை நுண்ணறிவு செயலியான ஊாயவபீவு இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உலகெங்கிலும் உள்ள பல பயனர்களால் ChatGPT சேவையை அணுக முடியவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ChatGPT இயங்காதது தொடர்பான முறைப்பாடுகள் இந்தியா மற்றும் அமெரிக்காவில் அதிக அளவில் பதிவாகியுள்ளன.





# சிங்கப்பூர் சரக்கு கப்பலில் தீவிரமடையும் தீப்பரவல்

இந்தியாவின் – கேரள கடற்கரைக்கு அருகே சரக்குக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவல் தற்போது தீவிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல் நேற்று முன்தினம் தீப்பரவலுக்குள்ளான நிலையில் அதனை அணைக்கும் பணியில் இந்தியக் கடலோர காவல்படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், தீ வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட இந்த சீன சரக்குக்கப்பல், கொழும்பு துறைமுகத்திலிருந்து கடந்த 07 ஆம் திகதி மும்பை நோக்கிப் பயணித்தது.

இந்தநிலையில், விபத்தின் போது கப்பலில் 22 பணியாளர்கள் இருந்தனர் எனவும் அவர்களில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விபத்தின் போது காணாமல் போன நால்வரும் தொடர்ந்தும் தேடப்பட்டு வருகின்றனர் என இந்தியக் கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

மேற்படி கப்பலில் இருந்த கொள்கலன் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பையடுத்தே அதில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.





# இந்திய இராணுவத்துக்கு 30,000 கோடி ரூபாவில் வான் பாதுகாப்பு ஏவுகணைகளை வாங்கத் திட்டம்

இந்திய இராணுவத்துக்கு 30,000 கோடி ரூபா மதிப்பில் அதி விரைவு வான் பாதுகாப்பு ஏவுகணைகளை (க்யூ.ஆர் - எஸ்.ஏ.எம்) வாங்க பாதுகாப்புத்துறை அமைச்சகம் விரைவில் ஒப்புதல் அளிக்கவுள்ளது.

ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பாகிஸ்தான் பதில் தாக்குதலில் இறங்கியபோது தரைவழி தாக்குதலை விட வான் வழி தாக்குதல்தான் அதிகமாக இருந்தது. இந்தியா மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் அனுப்பிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் எல்லாம் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இவற்றில் பெரும்பாலனவை துருக்கி மற்றும் சீன ட்ரோன்கள். இவற்றை உள்நாட்டு ஆகாஷ் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தின. இதனால் இந்திய இராணுவத்தில் தரையிலிருந்து வான் இலக்குகளை தகர்க்கும் படைப்பிரிவுகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக 30,000 கோடி ரூபா மதிப்பில் க்யூ.ஆர் - எஸ்.ஏ.எம். என்ற அதிவிரைவு வான் பாதுகாப்பு ஏவுகணை யூனிட்களை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏவுகணைகள் எதிரி நாட்டின் போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் மற்றும் ட்ரோன்களை 25 கிலோ மீற்றர் முதல் 30. கிலோ மீற்றர் தூரத்தில் சுட்டு வீழ்த்தும். இந்த ஏவுகணைகளை பாரத் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பாரத் டைனமிக்ஸ் என்ற பொதுத்துறை நிறுவனங்கள் தயாரிக்கின்றன.

இந்த ஏவுகணைகளை டி.ஆர்.டி.ஓ. ஏற்கெனவே வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் கூட்டம் இந்த மாத இறுதியில் நடைபெறும். அப்போது க்யூ.ஆர் - எஸ்.ஏ.எம். ஏவுகணைகள் கொள்முதலுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

இந்திய இராணுவம் மற்றும் விமானப்படையிடம் ஏற்கெனவே எஸ் - 400, ஆகாஷ், பராக் -8, இக்லா மற்றும் எல் -70 என்ற வான் பாதுகாப்பு ஆயுதங்கள் உள்ளன. அவற்றுடன் க்யூ.ஆர் - எஸ்.ஏ.எம். ஏவுகணை யூனிட்கள் இணையும்போது, நாட்டின் வான் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கும்.

இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் 6 கிலோ மீற்றர் தொலைவில் தாக்குதல் நடத்தும் குறுகிய தூர வான் பாதுகாப்பு ஏவுகணை, 350 கிலோ மீற்றர் சென்று தாக்கும் தொலை தூர ஏவுகணையை குஷா திட்டத்தின் கீழ் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இவற்றை 2028-29 இம் ஆண்டில் இராணுவத்தில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

# மகேந்திர சிங் டோனிக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து




ஐ.சி.சி.யின் ஹால் ஆஃப் ஃபேம் பட்டியலில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் டோனிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், “ஹால் ஆஃப் ஃபேம்“ வரிசையில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் மகேந்திர சிங் டோனியை சேர்த்துள்ளது.

இதையடுத்து, அவருக்கு வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில்,

ஐ.சி.சி.யின் பெருமைமிகு “ஹால் ஆஃப் ஃபேம்“ வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் டோனிக்கு என் வாழ்த்துக்கள். ஒருநாள் போட்டிகளில் அதிக எண்ணிக்கையில் இந்தியாவுக்குத் தலைமை தாங்கியது தொடங்கி, அதிக ஸ்டம்பிங் செய்தவர் என்ற சாதனை படைத்து, அனைத்து ஐ.சி.சி. கோப்பைகளையும் வென்ற ஒரே தலைவர் என்பது முதல் சென்னை அணியை 5 முறை ஐ.பி.எல். கோப்பையையும், இருமுறை சாம்பியன்ஸ் லீக் தொடரிலும் வெற்றிபெறச் செய்தது வரை நீங்கள் உயர்சிறப்பான கிரிக்கெட் மரபைக் கட்டியெழுப்பியுள்ளீர்கள்.”- என்று குறிப்பிட்டுள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 3

புதன்கிழமை 11/06/2025

## இலங்கை – கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவானார்



C2 ▶



### ட்ரம்பின் வரி விதிப்பு:

# கனடாவுக்கு மாத்திரமன்றி அமெரிக்காவுக்கும் பாதிப்பு

ட்ரம்பின் வரி விதிப்புகள் மற்றும் கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பதாக மிரட்டல் ஆகிய விடயங்கள் இரு தரப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக, சுற்றுலாத்துறை கணிசமான அளவில் பாதிக்கப் பட்டுள்ளது. தங்களை மிரட்டும் ட்ரம் புக்காக அமெரிக்காவை புறக் கணிக்க முடிவு செய்துள்ளார்கள் கனேடியர்கள். அதனால் அமெரிக்கா வுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.C2 ▶



# எல்லைப் பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக மோன்ரியல் நகரில் மக்கள் போராட்டம்

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட கனடா அரசின் பில் சீ -2 சட்ட மூலத்தை எதிர்த்து, மக்கள் உரிமை மற்றும் குடியுரிமை ஆதரவாளர்கள் ஞாயிற் றுக்கிழமை மோன்ரியல் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சட்டமூலம் நாடு முழுவதும் எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத் தும் நோக்கில் கொண்டுவரப்பட்ட தாகும், ஆனால் இது பெரும் அள வில் குடிபெயர்ந்தவர்களின் வாழ்வை யும் உரிமைகளையும் பாதிக்கும் என எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

மொத்தம் 80 இற்கும் மேற்பட்ட வர்கள், கனடா குடியேற்றம் மற்றும் அகதிகள் வாரிய அலுவலகம் முன்பு ஒன்றுகூடி, “எல்லோருக்கும் நிலை யான அந்தஸ்து வேண்டும்“ மற்றும் “அகதிகளுடன் ஒற்றுமை“என கூச்ச லிட்டனர்.

C2 ▶



# கேலிடோனியாவில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ஒன்டாரியோவின் ஹால்டிமண்ட் கவுண்டியில் காரொன்றும் SUV ரக வாகனமொன்றும் மோதிய சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் இரண்டு பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர் என்று ஒன்டாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை மதியம் 3.30, கேலிடோனியாவின் ஆர்கைல் வீதி தெற்குப் பகுதியில், ஹைவே 6 அருகே இடம்பெற்றுள்ளது.

விபத்து நடந்த இடத்திற்கு, ஒன்டாரியோ மாகாணக் பொலிஸின் ஹால்டிமண்ட் பிரிவினருடன், ஹால்டிமண்ட் கவுண்டி தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் குழுவினரும் விரைந்து சென்றனர்.

வாகனத்தை ஓட்டிய நபர், கடுமையான மற்றும் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து, அவர் இறந்துள்ளார் என அறிவிக்கப்பட்டது.

அந்த வாகனத்தில் பயணித்த மேலும் ஒருவரும் உயிருக்கு ஆபத்தான நிலைமையுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

SUV ரக வாகனத்தை செலுத்திய நபர், உயிருக்கு ஆபத்தில்லை எனக் கூறப்படும் காயங்களுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இது வரை உயிரிழந்த நபரின் அல்லது காயமடைந்தவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

## அமெரிக்காவில் தாக்குதலுக்குத் திட்டமிட்டார்:

# பாகிஸ்தான் நாட்டவரை நாடு கடத்தியது கனடா





நியூயோர்க் நகரில் யூதர்கள் மீது தாக்குதல் நடத்த சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு, பாகிஸ்தானியர் ஒருவர் கனடாவிலிருந்து அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

ஷாஜீப் ஜாதூன் என்றும் அழைக்கப்படும் 20 வயதான முகமது ஷாஜீப் கான், செப்டம்பர் மாதம் கனடாவில் கைது செய்யப்பட்டார்.

அவர் மீதான குற்றவியல் புகாரின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டு இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் ஒஅக்டோபர் 7 ஆம் திகதி நினைவு நாளில், புரூக்ளினில் உள்ள ஒரு யூத மையத்தில் ஐ.எஸ் அமைப்புக்கு ஆதரவாக ஒரு கூட்ட துப்பாக்கிச் சூடு நடத்த கான் நியூயோர்க் செல்ல திட்டமிட்டிருந்தார்.

யூத சமூகத்தைச் சேர்ந்த முடிந்த வரை பலரைக் கொல்ல தானியங்கி ஆயுதங்களைப் பயன்படுத்த அவர் திட்டமிட்டார், அனைத்தும் ஐ.எஸ் அமைப்புக்கு ஆதரவாகவே என அமெரிக்க சட்டத்தரணி ஜே கிளேட்டன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க – கனடா எல்லையிலிருந்து சுமார் 12 மைல் (19 கிலோமீட்டர்) தொலைவில் உள்ள ஓர்ம்ஸ்டவுன் நகராட்சியில் கனேடிய அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

ஒரு வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்கு பொருள் ஆதரவு மற்றும் வளங்களை வழங்க முயற்சித்ததாகவும், பயங்கரவாதச் செயல்களைச் செய்ய முயன்றதாகவும் கான் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

### எல்லைப் பாதுகாப்பு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆர்ப்பாட்டத்தை 'Solidarity Across Borders' அமைப்பு ஏற்பாடு செய்தது. எல்லைப் பாதுகாப்பு பெயரில் கொண்டு வரப்படும் இந்த மசோதா, சமூகங்களைப் பாதுகாப்பதில்லை.

இதனால் எல்லைகளை பாதுகாப்பாக கடக்கவும் சிரமமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் அனைவரும் மனிதர்கள் தான். சமத்துவம், பாதுகாப்பு மற்றும் செல்லும் சுதந்திரம் எங்களுக்கு உரிமையாகவே இருக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### கனடாவுக்கும்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரத்தில், கனடாவுடன் மோதல் என்பதால், கனடா சென்றால் தங்களுக்கு எப்படிப்பட்ட வரவேற்பு இருக்குமோ என, அமெரிக்கர்கள் கனடாவுக்கு சுற்றுலா வர தயங்குவதும் தெரியவந்துள்ளது.

மே மாதத்தில், கனடாவுக்கு காரில் சுற்றுலா வந்த அமெரிக்கர்கள் எண்ணிக்கை, கடந்த ஆண்டை ஒப்பிடும் போது, 10.7 சதவிகிதமும், விமானம் மூலம் வந்தவர்கள் எண்ணிக்கை 5.5 சதவிகிதமும் குறைந்துள்ளது.

மீண்டும் சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்காக, இரு தரப்பும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.

அமெரிக்க சுற்றுலாத்தலங்கள் சில, கனேடியர்களுக்கு சிறப்பு சலுகைகளை அறிவித்துள்ளன. மொத்தத்தில் ட்ரம்பால் பிரச்சினை உருவானாலும், எப்படியாவது மீண்டும் சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்க இரு நாடுகளும் முயற்சிகளில் இறங்கியுள்ளன.



# இலங்கை – கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவானார்

10ஆவது நாடாளுமன்றத்தின் இலங்கை – கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை – கனடா நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள ஸ்தாபிப்ப–தற்கான கூட்டம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவின் தலைமையில் கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே இத் தெரிவு இடம்பெற்றது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார். அத்துடன், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பதவியணித் தலைமையதிகாரியும், நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த ஹெட்டியாராச்சி இலங்கை – கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் ஏழு தசாப்தத்திற்கு மேலாகக் காணப்படும் நீண்டகால உறவுகளை நினைவுகூர்ந்தார். இலங்கையின் 9வது பெரிய ஏற்றுமதி சந்தையாக கனடா விளங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றங்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய சபாநாயகர், நாடாளுமன்ற நட்புறவுச் சங்கம் இரு நாட்டு சட்டமன்றங்களுக்கும் இடையில் முக்கிய பாலமாகச் செயற்படும் என்றார். இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து கனடா கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சபாநாயகர் கேட்டுக் கொண்டார்.

பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட மதிப்புக்களின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ள இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட தலைவர் அமைச்சர் அநுர கருணாதிலக உரையாற்றுகையில், இரு நாடாளுமன்றங்களுக்கும் இடையில் ஒரு பாலமாக நட்புறவு சங்கத்தின் முக்கிய பங்கை வலியுறுத்தியதுடன், இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையே ஏற்கனவே வலுவான உறவுகளை ஆழப்படுத்த அர்த்தமுள்ள உறவுகளை இதன் மூலம் மேம்படுத்த முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் நன்றியுரையாற்றிய நட்புறவு சங்கத்தின் சமிந்த ஹெட்டயாராச்சி, கனடாவின் நீடித்த நட்புக்கு அவர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இலங்கை – கனடா நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டத்திற்கு முன்னர் சபாநாயகருக்கும், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் சட்டவாக்க செயற்பாடுகள் குறித்து மகாணசபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் தெளிவுபடுத்தல்களை வழங்கும் வகையில் நாடாளுமன்றத்தில் ஆய்வு மையமொன்றை விரைவில் அமைக்க இருப்பதாக சபாநாயகர் குறிப்பிட்டார். அத்துடன், ஊழல் மற்றும் மோசடியை ஒழிப்பதில் அரசாங்கம் உறுதியா நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் எடுத்துக் கூறினார்.







